# புதுச்சேரி
# பள்ளிக் கல்வி இயக்ககம்
## மேல்நிலைத் தேர்வு, மார்ச் 2017

## மின்னணு மதிப்பெண் சான்றிதழ்களை மின் ஆவணக் காப்பகம் மூலம் பதிவிறக்கம் செய்தல் தொடர்பான செய்திக் குறிப்பு

மார்ச் 2017, மேல்நிலைத் தேர்வெழுதிய மாணாக்கருக்கு 10.07.2017 முதல் அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும், மாணாக்கருக்கு மின்னணு மதிப்பெண் சான்றிதழ்களை மத்திய அரசின் மின் ஆவணக் காப்பகத்தின் (Digital Locker) மூலம், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் தரவுக் களஞ்சியத்திலிருந்து 14.07.2017 முதல் நேரடியாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மின்னணு மதிப்பெண் சான்றிதழ்களை மின் ஆவணக் காப்பகம் (Digital Locker) மூலம் மட்டுமே பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால் மாணாக்கர் மின் ஆவணக் காப்பகத்தின் www.digilocker.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்கள் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட அலைபேசி எண்ணைப் பயன்படுத்தி தங்களுக்கான மின் ஆவணக் காப்பகக் கணக்கினைத் துவக்க வேண்டும்.

மாணாக்கர் ஆதார் எண்ணுடன் அவர்களது அலைபேசி எண்ணை இணைக்கப்படாத பட்சத்தில் அருகாமையிலுள்ள அரசு இ–சேவை மையத்தை அணுகி ஆதார் எண்ணுடன் அலைபேசி எண்ணை இணைத்து மின் ஆவணக் காப்பகக் கணக்கினைத் துவக்கலாம்.

மாணாக்கரின் மின்னணு மதிப்பெண் சான்றிதழ்களை மின் ஆவணக் காப்பகக் கணக்கு மூலமாகப் பதிவிறக்கம் செய்யும் வழிமுறைகள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்,

மாணாக்கர் மின்னணு மதிப்பெண் சான்றிதழ்களை எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம். மேலும், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு மின்னணுச் சான்றிதழை இணையதளவழியாகவும் சமர்ப்பிக்க பயன்படுத்திக் கொள்ளலாம்.

இம்மின்னணுச் சான்றிதழ், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் தரவுக் களஞ்சியத்திலிருந்து மின்னணு முறையில் நேரடியாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளப்படுவதால், மாணாக்கரின் மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்படுகிறது.

(ஜெ. கிருஷ்ணராஜூ)
இணை இயக்குநர்

இந்த செய்தியினை தங்களது நாளிதழ் / தொலைக்காட்சியில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஜெ. கிருஷ்ணராஜூ)
இணை இயக்குநர்